SRI K. PONNIAN : தலைவர் அவர்களே, வால்பாறை பிரதேசத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர்களை எஸ்டேட்டாக வைத்துக்கொண்டு அதில் வாழும் தொழில் மக்களுக்கு ஒரு பொதுக்கூட்டம் நடத்தவோ அல்லது வேறு நல்ல காரியங்கள் இதுபோல் நடத்தவோ ஒலிபெருக்கி லைசென்ஸ் கேட்டால், மறுக்கப்படுகிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

MR. SPEAKER : இதற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது.

Selection of books for non-detailed study

* 403 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the book " எனது குறிக்கோள் " has been prescribed for non-detailed study in higher forms for the year 1958;

(b) whether the Government have given any instructions to the Text Book Committee to select such books which contain certain principles; and

(c) if so, the principles adopted by the Text Book Committee in selecting books?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) No. Sir.

(b) & (c) The attention of the Member is invited to the rules relating to the Text Book Committee published as Notification No. 11 on pages 25–33 of the Rules Supplement to Part I-B of the *Fort St. George Gazette*, dated 16th June 1954. The Government do not issue any instructions in regard to any particular book or books.

SRI N. K. PALANISAMI : சர்க்கார் நிர்ணயிருத்திருக்கும் கொள்கைக்கும் அல்லது தப்பிதமாகவும் அந்த புஸ்தகம் இருந்தால், பப்ளிஷ் செய்தால், அதைத் தடுப்பதற்கும் டெக்ஸ்ட் புக் கமிட்டிக்கோ ; டிபார்ட்மெண்டுக்கோ அதிகாரம் இருக்கிறதா ?

MR. SPEAKER : Is it not a hypothetical question since it contains " இருந்தால், செய்தால் " ? How can the Government answer it? But I would have no objection if the Hon. Minister is going to answer.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் திரு. பழனிசாமி அவர்கள் கேட்டிருப்பது " எனது குறிக்கோள் " என்ற புஸ்தகத்தைப் பற்றி. எனக்குக் கிடைத்திருக்கும் தகவலில் இது வரையில் இம்மாதிரி புஸ்தகம் டெக்ஸ்ட் புக் கமிட்டியாருடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை என்பது. இதுபற்றி அவர்கள் பரிசீலனை செய்யவில்லை.

Cattle Trespass Act

* 404 Q.—SRI A. VEDARATHNAM : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) கட்டுப்பாடின்றி திரியும் கால்நடைகளைக் கட்டுப்படுத்த அரசாங்கம் ஏதேனும் கடுமையாக நடவடிக்கை எடுக்க உத்தேசமுண்டா ?

(ஆ) அப்படியானால், அதன் விபரமென்ன ?

(இ) Cattle Trespass சட்டத்தை மாகாணம் முழுவதும் அமுலுக்குக் கொண்டு வர ஏதேனும் உத்தேசமுண்டா ?

[17th February 1959]

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) The Cattle Trespass Act, 1871, is being enforced to control straying cattle.

(இ) The above Act which is a Central Act is alerady in force in the Madras State except in the transferred areas where the Travancore-Cochin Cattle Trespass Act, 1125, is in force. It is proposed to extend the Cattle Trespass Act, 1871, to the transferred territory and repeal the Travancore-Cochin Cattle Trespass Act in force there now.

SRI A. VEDARATHNAM : விவசாய வளர்ச்சி, வனமகோற்சவம் பற்றியெல்லாம் பிரசாரம் செய்து, அந்தத் துறையிலே அதிக அபிவிருத்தியை எதிர்ப்பார்க்கின்ற நாம், கட்டுப்பாடின்றித் திரிகின்ற இந்தக் கால் நடைகளை சும்மா விடுவதினாலே விவசாயத்திற்கும் மரம் நடு விழாவில் நடுகின்ற மரங்களுக்கும் ஊன்விளைகின்ற காரணத்தால், கடுமையான நடவடிக்கை எடுத்து, கட்டுப்பாடின்றித் திரிகின்ற கால் நடைகளைக் கட்டுப் படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ? இப்பொழுதிருக்கும் சட்டத்தின் பிரகாரம் தனியாகக் கம்ப்ளெயிண்ட் கொடுத்து, எவிடென்ஸ் எடுத்து நிரூபிக்கவேண்டிய பொறுப்பு விவசாயிகளுக்கு ஏற்படுகிறது. அப்படி யின்றி, பவுண்டில் அடைக்கப்படும் மாடுகளுக்கெல்லாம் சட்டத்தில் கண்ட அபராதம் விதிக்க அரசாங்கம் வகை செய்யுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தச் சட்டத்தை இன்னும் தீவிரமாக அமுலுக்குக் கொண்டுவரும் விஷயம் பரிசீலனையில் இருக்கிறது. இதிலே இன்னொரு கஷ்டம் என்னவென்றால், கட்டுப்பாட்டில் இருக்கும் கால் நடையை அதனுடைய சொந்தக்காரர்கள் அவிழ்த்து விட்டு மற்றவர்கள் நிலத்தில் மேயட்டுமே என்று விட்டுவிடுகிறார்கள்.

SRI K. PONNIAN : நமது நாட்டில் விவசாயத்திற்கு கால்நடை செல்வம் தான் நமக்கு அதிகமாக வேண்டியதாக இருக்கிறது. அதற்கு முதலிடம் கொடுக்கப்பட்டு வருவதால் மலை அடிவாரங்களில் கால் நடைகளை மேய்ப்பதற்கு சர்க்கார் அனுமதிக்குமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்பொழுது கேட்கப்பட்டி ருக்கும் விஷயம் வேறு, கனம் அங்கத்தினர் கேட்கும் விஷயம் வேறு.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that cows belonging to certain temples roam freely in the city streets causing obstruction to motorists and road users and, if so, what action has been taken to prevent this?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir, it is not cow, it is the bull that is dedicated to the Gods. (Laughter.)

SRI K. B. S. MANI : சுயேச்சையாக திரியும் கால்நடைகளை ஓட்டிக் கொண்டு போய் பவுண்டுகளில் அடைத்தாலும் அவைகளை விவசாயிகள் மீட்டுக்கொண்டு வந்த பிறகு அவைகள் மறுபடியும் விவசாயத் திற்கும் மற்றப்படியும் தொந்தரவு கொடுக்கின்றன. அதனால் தஞ்சை வட ஆற்காடு முதலிய ஜில்லாக்களில் பல லாரி, கார், விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஏனென்றால் அவைகள் மீண்டும் வெளியில் வந்து கண்டபடியெல்லாம் ரோடுகளிலும் மெயின் ரஸ்தாக்களிலும் திரிகின்றன. ஆகவே இப்படிப்பட்ட தொல்லைகள் ஏற்படா வண்ணம் சர்க்கார் அதில் தலையிட்டு அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை போலீஸைக்கொண்டு எடுப் பதற்கு முயற்சிக்குமா ?

[17th February 1959

THE HON. SRI M. A. MANICKAVELU : இதைத்தான் நான் முன்னமே சொன்னேன். இந்த திட்டத்தை இன்னும் தீவிரமாக அமுலுக்குக் கொண்டு வருவதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது பரிசிலனையில் இருக்கிறது என்றும் சொன்னேன்.

Hydrographic survey

* 405 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether any hydrographic survey was made recently;

(*b*) if so, what are the findings; and

(*c*) if not, whether there is any programme for hydrographic survey?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir. Hydrographic surveys of Cuddalore Port, Nagapattinam Road-stead and Tuticorin Port have been carried out by the Hydrographic Department, Indian Navy, between March 1955 and February 1958.

(*b*) While only a draft survey plan of the Cuddalore Port has been received by the Port authorities, the charts for the Nagapattinam and Tuticorin ports are still awaited.

(*c*) A survey of the Pamban Pass has been recommended, but in view of the dearth of survey vessels with the Indian Navy, this work has been assigned only a low priority by the authorities at the Centre.

SRI K. SATTANATHA KARAYALAR : கொளச்சல், லீபுரம், கன்யாகுமரி போன்ற கன்யாகுமரி மாவட்டத்தில் பழைய காலத்திய துறைமுகம் இருக்கிறது. அந்தத் துறைமுகத்தை நல்ல நவீன முறையில் அமைப்பதற்கும் இந்த சர்க்கார் மத்திய அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : அந்தத் தகவல் என்னிடம் இல்லே. தனியான கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : எக்ஸ்பிரஸ் பஸ்கள்...

MR. SPEAKER : அது அடுத்த கேள்வி.

SRI A. GOVINDASAMY : கடலூர் துறைமுகத்தை எந்த முறையில் விஸ்தரிக்கலாம் என்று சர்வே செய்தவர்கள் சிபாரிசு செய்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : அந்தத் தகவல் இப்பொழுது என்னிடம் இல்லே. தனியாகக் கேள்வி கேட்க வேண்டும்.

SRI N. MARUDACHALAM : கோவை ஜில்லாவில் மேற்கு தொடர்ச்சி மலேயிலுள்ள வெள்ளியங்கிரியில் ஒரு நீர்வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அதைப்பற்றி ஏதாவது பரிசிலனே செய்யப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : இந்தக் கேள்வி எப்படி எழும் ?

THE HON. SRI P. KAKKAN : இது அந்தக் கேள்விக்கு சம்பந்தப்பட்டது இல்லே.